1972 மார்ச் 30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போதே அதிகமான அளவுக்கு விண்ணப்பங்கள் வருகின்றதனுல், முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு என்று போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இடங்கள் அதிகமாக இருந்து விண்ணப்பங்கள் குறைவாக இருந்தால், தரக் குறைவாக இருப்பவர்களைக்கூட சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் வரும். இப்போது முதல், இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர்கல் அதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பித்துக் கொள்ளும் நிலையில் யாரைச் சேர்த்துக் கொள்வது என்று வரும்போது, சில பல விதிமுறைகளை வைத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த விதிமுறை நியாயத்தின் அடிப் படையில் அமைய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விதிமுறை இப்போது வகுக்கப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : பி. டி. ட்ரெயினிங்குக்குப் போவதாக, இருந்தால் 28 வயதுக்குள் விண்ணப்பம் போட வேண்டும். 28 வயதை நெருங்கக்கூடியவர்கள் மூன்றும் வகுப்பில் தேறியவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தால்தான் எதிர்காலத்தில் அவர்கள் இந்த வேலைக்காவது போகமுடியும். ஆகவே இந்த வயதை மனத்தில் வைத்துக் கொண்டு, 28 வயதை நெருங்கக்கூடியவர்கள் மூன்றாவது வகுப்பில் தேறியிருந்தாலும், அவர்களுக்கு இப்படிப்பட்ட சலுகை கொடுப்பதுபற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, குறைந்த வயதுடையவர்கள் ஏராளமானவர்கள் விண்ணப்பம் செய்து கொண்டிருப்பதால் 28 வயது வரையில் அலட்சியமான போக்கிலே விட்டுவிட்டு வந்தவர்களைக் கவனிக்க வேண்டிய அவசியம் இருக்காது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இன்றைய தேர்வு முறை மாணவர்களுடைய ஞாபக சக்தியைச் சோதிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறதே தவிர, மாணவர்களுடைய திறமையை வெளிப்படுத்து வதற்கான சந்தர்ப்பங்களை அளிப்பதாக இல்லை. ஆகவே, இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்க்கும்போது மூன்றும் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, முதல் வகுப்பு ஆகிய எந்த வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தவர்களானுலும், அவர்கள் எல்லோருக்கும் நேரடித் தேர்வு வைத்து, “வைவா வோஸ்” முறையில் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சிப் பள்ளியில் இடம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேறு ஒரு திறமை யான முறையைக் கண்டுபிடிக்கும் வரையில் இந்த முறைக்கு நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நேர்முகத் தேர்வு வைத்து அதிலும் ஓரளவுக்கு எண்கள் தரப்பட்டு, அந்த எண்களின் அடிப்படையில் அவர்கள் ஆப்டிட்யூட், எக்ஸ்ட்ரா–கரிகுலர் ஆக்டிவிடீஸ் இன்னும் வேறு பல நிகழ்ச்சிகளிலே அவர்கள் கலந்து கொள்ளும் தன்மை ஆகியவைகளைக் கணக்கிட்டு அவர்களுக்கு மதிப்பெண்கள் தரப்பட்டு அந்த வகையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : இப்பொழுது ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இட நெருக்கடி இருக்கிறதா ? அப்படி இருந்தால், மாலை நேர ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு. டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அந்தப் பள்ளியில் சேருவதற்கு ஏராளமான மாணவர்கள் விண்ணப்பம் செய்கிறார்கள். அதனால் இட நெருக்கடி இருக்கிறது. ஆனால், ஆசிரியர்களுடைய எண்ணிக்கை அதிகமாகவே இருக்கிறது. அதனால், ஆசிரியர் பயிற்சி எண்ணிக்கையை ஓரளவு குறைத்துக் கொண்டு வருகிறோம். 260 செக்ஷன்கள் இருந்த இடத்தை இப்பொழுது 160 ஆக ஆக்கியிருக்கிறோம். இன்னும்கூட குறைக்க வேண்டும். அதிகமான ஆசிரியர்களை, பயிற்சி அளித்துத் தயார் செய்து கொண்டிருக்கும்போது அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காத சூழ்நிலை, இன்னும் இதுபோன்ற பல்வேறு சங்கடங்களெல்லாம் ஏற்படுகின்றன. ஆகவே, இரண்டாண்டுக் காலம், மூன்றாண்டுக் காலம் கழித்து எத்தனை ஆசிரியர்கள். நமக்குத் தேவைப்படும் என்று திட்டமிட்டு, அந்தத் திட்டமிட்ட அடிப்படையில் ஆசிரியர் பயிற்சிக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அத்தகைய சூழ்நிலையை நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : தனியார் கல்லூரிகளில் ஜாதி மதம் பார்த்து, மூன்றாவது வகுப்பில் தேறியிருந்தாலும் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஜாதி மதம் பார்க்கக் கூடாது, சட்டப்படி. ஆனால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சத வீதம், பிற்பட்ட வகுப்பினருக்கு 31 சத வீதம் இடங்கள் ஒதுக்கி வைக்க வேண்டும் என்று ஒரு விதி இருக்கிறது. அந்த விதியின் அடிப்படையில் தனியார்க் கல்லூரிகளிலும் சர்க்கார்க் கல்லூரிகளிலும் இப்போதே அவர்களுக்கு இடம் இருக்கிறது.

Radio sets inSchools

790 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have instructed educational institutions to equip them with radios for the benefit of students ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) (இ) தமிழகத்திலுள்ள எல்லா உயர்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடமிருந்து ஒலி ஒளிக் கல்விக்காக தனிக் கட்டணத்தை (Audio-visual Education special fees) வசூலிப்பதற்கும் , இந்நிதியினின்று ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டியினை நிர்ணயிக்கப்பட்ட விலையினில்

வாங்கிக் கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளன. பள்ளி மின்வசதி யற்று இருந்தால், மாணவர்கள் வானொலி கல்வி நிகழ்ச்சிகள் மூலம் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், மின்கல வானொலிப் பெட்டிகளைப் பெறுவதற்கும் அனுமதிக்கப்படுகின்றன.

திரு. என். டென்னிஸ் : எல்லாக் கல்வி நிலையங்களிலும் ஆணையிட பட்டு செயல்பட்டு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா, நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே எல்லாக் கல்வி நிலையங்களும் பெறவேண்டுமென்றுதான் ஆணையிடப் பட்டிருக்கிறது. பெரும்பாலான பள்ளிகளில் இருக்கின்றது என்று கருதுகிறேன். சிலவற்றிலே இல்லாமல் இருக்குமானால் அவைகளும் வாங்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு இருக்கிறது. சென்ற இரண்டு ஆண்டுகாலமாக வானொலி மூலம் 5–வது வகுப்பிலிருந்து 11 வகுப்பு வரையிலே உள்ள மாணவர்களுக்கு எல்லாப் பாடங்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையிலேதான் அந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய நிகழ்ச்சி நிரல்கள் எல்லாப் பள்ளிகளுக்கும் அனுப்பி வைக்கப் படுகின்றன. கட்டாயமாக வாங்கவேண்டுமென்றுதான் ஆணை பிறப்பிக் கப்பட்டிருக்கிறது. எவ்வளவு பள்ளிகள் வாங்கவில்லை என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஆல் இண்டியா ரேடியோ மூலமாக சொல்லித்தரப்படுகின்ற நிகழ்ச்சிகள் பிற்பகல் இரண்டு மணிக்குமேல் அரை மணி நேரம்தான் சொல்லிக் கொடுக்கப் படுகிறது. கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாகவே ஒரே மாதிரி யாகத்தான் போதனை நடைபெறுகிறது. காலத்திற்கு ஏற்றாற்போல் நம் முடைய வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல் எல்லாப் பாடங்களையும் ஆறுவது வகுப்பிலிருந்து அதிகமான நேரம் ஒதுக்கிச் சொல்லித் தருவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுதே வெவ்வேறு வகுப்புகளுக்கும் இருக்கின்ற பாடங்களைப் பற்றித்தான் சொல்லித்தரப்படுகின்றது. ஆண்டுக்கொருமுறை அவர்கள் அகில இந்திய அளவில் ஒரு மாநாடு நடத்துகிறார்கள், அதிலே ஆசிரியர்கள் தலைமையாசிரியர்கள், கல்வித் துறையினர்களைக் கலந்து கொள்ளச் செய்து அவர்கள் ஆலோசனைகளைக் கொடுத்தால் அவற்றை ஏற்றுக் கொண்டு செயல்படுகிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு ரிவ்யூ செய்கிற நிலையில் இருக்கின்ற முறையில் பலன் இருக்கிறதா, குறைபாடு இருக்கிறதா, எப்படி அதை நிவர்த்திக்கலாம் என்று பார்க்கிறார்கள். அங்கே சொல்லப்படுகின்ற யோசனைகளை யெல்லாம் ஆராய்ந்து ஏற்றுக் கொண்டு சங்கடங்கள் இருக்குமானால் அவற்றை நிவர்த்தி செய்ய வழி இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education, whether it will be possible to arrange radio programmes according to the syllabus that has been prescribed in schools ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வகுப்புகளிலே சொல்லித்தரப்படுகின்ற பாடத் திட்டங்களின், சிலபஸின் அடிப்படையிலேதான் அந்த மாணவர்களுக்குப் பயன்பட்டு வருகின்ற அளவுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதிலே மாறுதல்கள் ஏதாவது வேண்டுமென்று கேட்டால் இந்திய வானொலி நிலையத்தினர் அதற்கேற்றவாறு ஆராய்ந்து முடிவு செய்வார்கள்.

திரு. கு. காமாட்சி : வானொலியிலே பாடம் சொல்லிக் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே ஆங்கிலப்பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது பள்ளியிலே பூகோளப் பாடம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே அந்தந்த நேரத்திற்குத் தகுந்தமாதிரி பாடங்கள் சொல்லித்தர வசதிகளைச் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தத் தன்மையையொட்டிதான் நிகழ்ச்சி நிரல்களை எல்லாப் பள்ளிகளுக்கும் அவர்கள் அனுப்பி வைக்கிறார்கள். மாணவர்கள் கேட்பதற்கு ஏற்ற வகையிலே பீரியட்களை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டுமென்று பள்ளிகளுக்குச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளுக்கும் பிரஜக்டர் வாங்கித் தருவதற்குத் திட்டம் இருக்கிறதா? அதற்கு நிதி ஒதுக்கல் ஏதாவது செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லாப் பள்ளிகளுக்கும் அதை வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகின்ற நிலைமை இல்லை. சில பள்ளிகளிலே அந்த நிதியை வைத்துக் கொண்டே பிரஜக்டர் வாங்கி வைத்து இருக்கிறார்கள். சில பள்ளிகளிலே நன்கொடைகள் மூலமாகப் பெறப்பட்டு இருக்கிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலே பெரும் பள்ளிகளிலே பிரஜக்டர்கள் வைத்திருக்கிறார்கள். அங்கங்கு உள்ள நிதி வசதிகளைப் பொறுத்து ஆண்டுக்காண்டு சேருகின்ற தொகையைச் சேர்த்து அப்படிப்பட்ட கருவிகளை வாங்குவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்த் தினசரியான மாலைமுரசு என்ற இதழில் மாணவர்களுக்கு என்ற பகுதியிலே மாணவர்களுக்குத் தேவையான கணிதம், பொருளாதாரம் போன்ற விளக்கங்களை அளிக்கிறார்கள், அதைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்களின் எண்ணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பாராட்டுவதற்கு வரவேற்க வேண்டிய வாழ்த்துதற்குரிய ஒரு செயலாகும்.

திரு. என். இராஜாங்கம் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஆங்கிலத்திலேதான் பயிற்சி நடப்பதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டிலே படிக்கிறவர்கள் தமிழிலேதான் படிக்கிறார்கள், எனவே பயிற்சியையும் தமிழிலே அமல்படுத்துவதற்கு அரசு ஆலோசனை கூறுமா?